DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | **O.S :87/2015** | | | |
| Deposition of Witness | : | **பி.சா. 6** | | | |
| Name | : | **திரு.ஆனந்த்** | Occupation | : | இளநிலை உதவியாளர், சார்பதிவாளர் அலுவலகம் |
| Father's Name/ Husband | : | **சுப்ரமணியன்** | | | |
| Village | : | | Age | : | 34 |
| Taluk | : | **கும்பகோணம்** | | | |

Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act,1969 (Act 44 of 1969). 20-11-2025

**முதல் விசாரணை**

நான் கும்பகோணம் இணை சார் பதிவாளர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன் . இந்நீதிமன்றத்தில் மாவட்ட பதிவாளருக்கு வந்த அழைப்பாணை பேரில், அழைப்பாணையில் கோரியுள்ள ஆவணங்களை கொண்டு வந்திருக்கிறேன் . எனக்கு மாவட்ட பதிவாளர் சாட்சியமளிக்க கொடுத்த அனுமதி கடிதம் **சா.சா.ஆ– 5 ஆகும்**. பாபநாசம் தாலுக்கா அளவந்திபுரம் கிராமம் கீழ தெருவில் வசித்து வந்த நடேசபடையாச்சி குமாரர் நாகராஜன் , 10/05/2012 தேதியிட்ட உயிலை மாவட்ட பதிவாளரிடம் டெப்பாசிட் செய்ய நாகராஜன் தான் மனு கொடுத்தார். அவ்வாறு டெப்பாசிட் செய்த உயில் எங்கள் அலுவலகத்திலேயே இருந்தது. அந்த உயில் எஸ்.கண்ணன் என்கின்ற சுந்தரராஜன் என்பவர் 07/01/2015 அன்று மனு கொடுத்துள்ளார் . 09/01/2015 அன்று இந்த உயில் பிரித்து பார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அவ்வாறு பதிவு செய்யப்பட்டது இணை சார் பதிவாளர் –1, கும்பகோணத்தில். அசல் உயிலை நான் நீதிமன்றத்திற்கு கொண்டு வந்திருக்கிறேன். அந்த அசல் உயில் நீதிமன்றத்திற்கு கொண்டு

வந்திருக்கிறேன். அந்த அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட அதன் நகல் **சா.சா.ஆ.6 ஆகும்.** அந்த உயில் புத்தகம் 3 ஆவண எண் 6/2015. மொத்தம் 24 பக்கங்கள் கொண்டதாக அந்த உயில் உள்ளது. கண்ணன் கொடுத்த மனுவுடன் பி –ரசீது, நாகராஜனுடைய இறப்பு சான்றிதழ் , பிரபாகரன் மற்றும் நாகராஜன் வாரிசு சான்றிதழ்கள் உள்ளது . கண்ணன் கொடுத்த மனு மற்றும் அதனுடன் இணைக்கப்பட்டவைகளின் நகல் **சா.சா.ஆ. 7 ஆகும்**. உயில் பிரிக்கப்பட்ட போது ஆஜராகியிருந்த நபர் யார் யார் என்றால் அது பற்றிய குறிப்பு எதுவும் இல்லை.

6, 7, 10, 11, 18, 19, 20 **குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.**

**வாதி தரப்பில் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது**.

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.